**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. KARTHIKEYAN MANOHARAN ROUGH STONE & GRAVEL QUARRY, OVER AN EXTENT OF 1.96.03 HA AT SF.NO. 973/1, 973/7B, 975/2, 977 & 978/2 AT MARUTHADU VILLAGE, VANDAVASI TALUK, TIRUVANNAMALAI DISTRICT ON 24.02.2026 AT 12.00 NOON AT M/S. A.J. THIRUMANA MAHAL, MARUTHADU VILLAGE, VANDAVASI TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Selvi.L. Ambica Jain I.A.S., | : | Sub Collector, Cheyyar division, Tiruvannamalai. (Representative of the District Collector, Tiruvannamalai) |
| 2 | Er. A. Jothi Prakash | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 3 | Dr. S. Sugashini | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4 | Er. K. Prem Kumar | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5 | Thiru. P. Jayavel | : | Tahsildar, Vandavasi Taluk, Tiruvannamalai. |
| 6 | Thiru. D. Elavarasan | : | Inspector of Police, Kilkodungalore Police Station, Tiruvannamalai. |
| 7 | Thiru.Karthikeyan Manoharan | : | The Proponent, M/s. Karthikeyan Manoharan Rough Stone & Gravel Quarry. |
| 8 | Thiru.K. Vijayaraghavan | : | Environmental Impact Assessment (EIA) Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri. |
| 9 | Public | : | 66 Nos. (Attendance enclosed as Annexure). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, welcomed the Sub Collector, Cheyyar division, Tiruvannamalai, the general public, Revenue officials, Police department officials, Media persons and

the proprietor of M/s. Karthikeyan Manoharan, Rough Stone and Gravel Quarry who had assembled for the public hearing in connection with obtaining Environmental Clearance for the proposed Rough Stone and Gravel Quarry of M/s. Karthikeyan Manoharan. He further pointed out that prior notification regarding the conduct of this public hearing had already been published on 21.01.2026 in the Tamil and English daily newspapers, namely "Dinamalar" and "The New Indian Express." He also informed that public announcements had been made in and around Maruthadu Village through loudspeakers and distribution of pamphlets.

He further stated that, on behalf of the proponent of the proposed Rough Stone and Gravel Quarry project, their project consultant would present a detailed explanation of the project to the public, following which the public may given their views, suggestions, doubts, and seek clarifications regarding the project, and that all such event would be video graphed and audio recorded, and the minutes and records of this meeting would be forwarded to the State Environment Impact Assessment Authority-Tamil Nadu (SEIAA-TN).

The Sub Collector, Cheyyar division, inaugurated the public hearing meeting and requested the proponent (M/s. Karthikeyan Manoharan), of the proposed Rough Stone and Gravel Quarry, to present the detailed explanation regarding the proposed quarry project.

Thiru. K. Vijayaraghavan, Environmental Impact Assessment Consultant of M/s. Karthikeyan Manoharan Rough Stone and Gravel Quarry project from M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri, welcomed all those who had assembled for the public hearing meeting and delivered a detailed power point presentation explaining the operational aspects of the Rough Stone and Gravel Quarry project and the Environmental Management Plan to be implemented during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, announced that the public may express their views. He further requested that, before recording their views, the public should mention their name and their village name, before expressing their

opinions.

Accordingly, the following public expressed their views and suggestions.

**1. Tmt. Devagi, Maruthadu Village:**

She stated that there has been no electricity supply in their area for a long time and requested that necessary action be taken to provide electricity.

**2. Thiru. Lokeshwaran, Maruthadu Village:**

Thiru. Lokeshwaran extended his greetings to the public and government officials attending the public hearing. it is true that he has provided his five (5) acres of land to the quarry owner for establishing the stone quarry. He expressed that, considering the requests raised by the public, the Government should extend its cooperation so that the quarry may be operated without causing any issues to anyone.

Subsequently, he conveyed his views directly to the officials without using the microphone. The Sub-Registrar, Cheyyar, requested him to express his views through the microphone, as the proceedings were being officially recorded.

Thereafter, he stated that he himself had given the land for the said quarry and had provided five (5) acres for this purpose. He further requested that, in line with the public's demands, an alternative access pathway be arranged and necessary measures be taken by the Government officials to ensure that the work is carried out without causing any threat or disturbance to the public. He humbly requested that permission be granted to operate the quarry and concluded his remarks.

**3. Thiru. M.C. Chandran, Maruthadu Village:**

Thiru. M.C. Chandran stated that Mr. Karthikeyan has been engaged in establishing the crusher unit for the past one and a half years. He further mentioned that he is a member of the Parent-Teacher Association and that, when approached by the Headmaster and the Parent-Teacher Association, Mr.

Karthikeyan purchased and provided desks and chairs required for the school at his own expense. He also stated that although the school building was constructed at a cost of Rs. 2.5 crores through the TAHDCO organization, it had become damaged, and Mr. Karthikeyan renovated it at a cost of Rs. 3 lakhs. Since the teachers' desks and chairs were also damaged, he purchased and provided new ones. He mentioned that his land is situated near the quarry and that, as the approach road was not in good condition, water is being sprinkled daily from the crusher site up to the main road for maintenance. He further stated that the quarry for which the meeting is being conducted is located on the land provided by the mandabam owner. He added that his elder brother Radha had sold his land and left, and that his maternal cousin Ramesh still owns land there. Although the lands where the crusher is located belong to their relatives, no adverse impact has been experienced by them. He stated that Mr. Karthikeyan expressed gratitude to all those who provided land for operating the crusher. He further mentioned that more assistance needs to be extended to the village. In particular, he suggested that establishing an RO drinking water purification unit for the school would be beneficial. He also stated that donations are being provided to temples, though he was not aware of the specific details. He finally requested that necessary assistance be extended both to them and to the people residing in the nearby colonys.

**4. Thiru. M.S. Ramesh, Maruthadu Village:**

Thiru. M.S. Ramesh stated that he has served as the Deputy Chairman of the Panchayat for ten years. He owns ten acres of agricultural land at the site where the quarry is proposed to be established and confirmed that no inconvenience has been caused to him. He mentioned that the pathway to the quarry is maintained daily by water sprinkling. Further a donation of Rs. 2 lakh was provided to the temple.

**After that, No representation continued from the public for providing comments.**

As no members of the public came forward to continue expressing their views, the Sub Collector, Cheyyar Division, Tiruvannamalai, directed that the public hearing meeting be concluded, and accordingly, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai declared that the public hearing meeting had concluded.

Furthermore, regarding the proposed M/s. Karthikeyan Manoharan Rough Stone and Gravel Quarry Project, a total of 04 written petitions were received from the public, while no direct petitions and 01 written petition was received via email at the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

A. Jothiprakash 6/3/26
**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

6/3/26
**Sub Collector,**
**Cheyyar Division,**
**Tiruvannamalai.**

**District Collector,**
**Tiruvannamalai.**

**உத்தேசிக்கப்பட்ட தி/ள். கார்த்திகேயன் மனோகரன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள். 973/1, 973/7B, 975/2, 977 & 978/2, மருதாடு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 1.96.03 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 24.02.2026 அன்று மருதாடு கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். A.J. திருமண மஹால் திருமண மண்டபத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | செல்வி.ல.அம்பிகா ஜெயின் இ.ஆ.ப, | : | சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை. (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி) |
| 2 | திரு. அ. ஜோதி பிரகாஷ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 3 | முனைவர். சி. சுகாஷினி | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 4 | திரு. க. பிரேம் குமார் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 5 | திரு. பா. ஜெயவேல் | : | வட்டாட்சியர், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை. |
| 6 | திரு. D. இளவரசன் | : | காவல் ஆய்வாளர், கீழ்கொடுங்கலூர் காவல் நிலையம், திருவண்ணாமலை. |
| 7 | திரு. K. கார்த்திகேயன் மனோகரன் | : | உரிமையாளர் தி/ள். கார்த்திகேயன் மனோகரன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி. |
| 8 | திரு. விஜயராகவன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி. |
| 9 | பொதுமக்கள் | : | 66 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். கார்த்திகேயன் மனோகரன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை, பொதுமக்கள், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் மற்றும் தி/ள். கார்த்திகேயன் மனோகரன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 21.01.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், மருதாடு கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை தெரிவிக்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து,

7

உத்தேசிக்கப்பட்டுள்ள (தி/ள். கார்த்திகேயன் மனோகரன்), சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அவர்களை விளக்கவுரையை வழங்க அழைத்தார்.

தி/ள். கார்த்திகேயன் மனோகரன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. விஜயராகவன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**1. திருமதி. தேவகி, மருதாடு கிராமம்:**

திருமதி தேவகி அவர்கள் கூறுகையில், எங்களுக்கு மின்சாரம் வேண்டும் ரொம்ப நாளாக மின்சாரம் இல்லை என்று தெரிவித்தார்

**2. திரு. லோகேஸ்வரன், மருதாடு கிராமம்:**

திரு. லோகேஸ்வரன் அவர்கள் கூறுகையில், இக்கருத்துகேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு வணக்கம். கல் குவாரி அமைப்பதற்காக தனது ஐந்து (5) ஏக்கர் நிலத்தை குவாரி

உரிமையாளருக்கு வழங்கியிருப்பது உண்மைதான் என கூறினார். பொதுமக்கள் கேட்கும் கோரிக்கைக்கு வழிவகுத்து, யாருக்கும் பிரச்சினை இல்லாமல் குவாரி நடத்தப்பட அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

பின்னர், தனது கருத்தை மைக்கில் தெரிவிக்காமல் அதிகாரிகளிடம் தெரிவித்தார். அதற்கு சார்பதிவாளர், செய்யார் அவர்கள், கருத்துகள் பதிவு செய்யப்படுவதால் மைக்கில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அவர் கூறுகையில், இக்குவாரிக்கு இடம் வழங்கியது தானே என்றும், ஐந்து (5) ஏக்கர் நிலம் வழங்கியுள்ளேன் என்றும் தெரிவித்தார். பொதுமக்கள் கோரிக்கையின்படி மாற்றுப் பாதைக்கு வழிவகுத்து, மக்களுக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் இவ்வேலை மேற்கொள்ள அரசு அதிகாரிகள் தேவையான நடவடிக்கை எடுத்து, குவாரி நடத்த அனுமதி வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொண்டு தனது உரையை நிறைவு செய்தார்.

**3. திரு. எம்.சி. சந்திரன், மருதாடு கிராமம்:**

திரு. எம்.சி. சந்திரன் அவர்கள் கூறுகையில், திரு. கார்த்திகேயன் அவர்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கிரஷர் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார் என கூறினார். தாம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் இருப்பதாகவும், தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் சார்பில் அணுகியபோது, பள்ளிக்குத் தேவையான மேசைகள் மற்றும் நாற்காலிகளை தனது சொந்த செலவில் வாங்கி வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்தார். மேலும், தாட்கோ அமைப்பின் மூலம் ரூ. 2.5 கோடி செலவில் கட்டப்பட்ட பள்ளிக்கூடம் பழுதடைந்த நிலையில் இருந்ததை, ரூ. 3 லட்சம் செலவில் புனரமைத்து வழங்கியுள்ளார் என்றும் கூறினார். ஆசிரியர்களின் மேசை மற்றும் நாற்காலிகள் சேதமடைந்திருந்ததால், புதியவற்றையும் வாங்கி வழங்கியுள்ளார் என தெரிவித்தார். தனது நிலம் குவாரி அருகில் உள்ளதாகவும், செல்லும் பாதை சரியில்லாத காரணத்தினால் கிரஷர் முதல் சாலை வரை தினமும் தண்ணீர் தெளித்து பராமரித்து வருகிறார் என்றும் கூறினார்.

இக்கூட்டம் நடைபெறும் குவாரி, சத்திரத்தின் முதலாளி அவர்களின் நிலத்தில் நடைபெறுகிறது என்றும் தெரிவித்தார். தனது அண்ணன் ராதா அவர்கள் நிலத்தை விற்றுவிட்டு சென்றுவிட்டார் என்றும், தனது மாமா பிள்ளை ரமேஷ் அவர்களிடம் அங்கு நிலம் இருப்பதாகவும் கூறினார். கிரஷர் அமைந்துள்ள நிலங்கள் உறவினர்களுக்கு சொந்தமானவை என்றாலும், எங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவித்தார். திரு. கார்த்திகேயன் அவர்கள் கிரஷரை மீண்டும் இயக்குவதற்காக நிலம் வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் என்றும் கூறினார். மேலும், கிராமத்திற்கு இன்னும் பல உதவிகள் செய்ய வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார். குறிப்பாக, பள்ளிக்காக R.O. குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும் என கூறினார். கோயில்களுக்கும் நன்கொடை வழங்கி வருகிறார் என்றும் தெரிவித்தார். அதற்கான விபரங்கள் தமக்கு தெரியாது என்றும் குறிப்பிட்டார். மேலும், அருகில் காலனி இருப்பதாகவும், தங்களுக்கும் அந்த மக்களுக்கும் தேவையான உதவிகள் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்..

**4. திரு. எம்.எஸ். ரமேஷ், மருதாடு கிராமம்:**

திரு. எம்.எஸ். ரமேஷ் அவர்கள் கூறுகையில், நான் ஊராட்சி மன்ற துணைத் தலைவராக பத்து ஆண்டுகள் பதவி வகித்து வந்துள்ளேன். தற்போது குவாரி அமைக்க உள்ள இடத்தில் எனது 10 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதனால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. குவாரிக்கு செல்லும் பாதை தினமும் தண்ணீர் தெளித்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், கோவிலுக்கு ரூ. 2 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார் என்று தெரிவித்தார்.

**அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.**

பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவிக்க முன் வராததால் சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நிறைவுசெய்திட கூறியதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். கார்த்திகேயன் மனோகரன், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 04 மனுக்கள் பெறப்பட்டுள்ளது, நேரடியாக மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை மற்றும் மின்னஞ்சல் மூலமாக 01 மனு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

A. Joslin Prakash 6/3/26
**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை.**

6/3/26
**சார் ஆட்சியர்,**
**செய்யாறு கோட்டம்,**
**திருவண்ணாமலை.**

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**திருவண்ணாமலை.**